

# பனிமயம்

செப்டம்பர் 2024

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே,

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் பெயரால் வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

நம் தாயினுடைய 442ஆம் ஆண்டுப் பெருவிழாவினை பெருமகிழ்ச்சியோடும், நிறைவோடும் கொண்டாடி முடித்துள்ளோம். கொடிப்பவனி தொடங்கி கொடியிறக்கம் வரையிலும் நம் பேராலயத்தில் நடைபெற்ற அத்தனை வழிபாடுகளும் நம் தாயின் மீது நாம் கொண்டிருக்கும் பக்தியையும், பாசத்தையும் வெளிக்காட்டுவதாய் அமைந்திருந்தது. நம் ஆன்மீக வாழ்வுக்கும், சமூக வாழ்வுக்கும், உறவு வாழ்வுக்கும் இப்பெருவிழாவானது ஒரு பெரும் வரப்பிரசாதமாய் அமைந்தது. ஆண்டவருக்கும், அன்னைக்கும் நன்றி. பெருவிழா நிறைவுற்ற நாளிலிருந்து பிற சமயங்களைச் சார்ந்த சகோதர சகோதரிகள் பெருந்திரளாய் ஒவ்வொரு நாளும் மாதாவைத் தேடி வந்ததைப் பார்த்தபோது மெய் சிலிர்த்துப் போனேன். அன்னை நம் அனைவரையும் தொடர்ந்து, பாதுகாப்பாராக, ஆசீர்வதிப்பாராக. பெருவிழா சிறப்பாக நடைபெற உதவிட்ட உங்களனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மீண்டுமாக நன்றியை உரித்தாக்குகிறேன்.

செப்டம்பர் மாதம் விவிலிய மாதம். வாழ்நாள் முழுவதும், வருடம் முழுவதும் விவிலியத்தை வாசிக்கவேண்டும் என்றாலும் தமிழக திருச்சபையானது செப்டம்பர் மாதத்தை விவிலிய மாதமாய் சிறப்பிக்கவும், சிறப்பு செயல்பாடுகளை ஏறெடுக்கவும் நம்மை அழைக்கிறது. ஒவ்வொரு வீட்டிலுமே இம்மாதத்தில் விவிலியத்தை அரங்கேற்றம் செய்துவையுங்கள். கூடுமானால் ஒவ்வொரு நாளும் குடும்பமாகக் கூடி விவிலியத்தின் ஏதாவது ஒரு பகுதியை வாசித்து உங்களுக்குள்ளே கருத்துப் பகிர்வு செய்யுங்கள். நம் குழந்தைகளை தினமும் ஒரு விவிலிய வசனத்தை மனப்பாடம் செய்யச் சொல்லுங்கள். நம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு செல்லும் முன் விவிலியத்தின் சிறுபகுதியை வாசித்துவிட்டு செல்லும்படி தூண்டுங்கள். வீட்டிலிருப்போர் விவிலிய வாசிப்புக்கு அதிக நேரத்தை செலவிடுங்கள். தினமும் கோவிலுக்கு வரும்போது திருவிவிலியம் கொண்டு வருவேன் என்ற தீர்மானத்தை எடுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக "விவிலியத்தை வாழ்வாக்குவோம்" என்ற தீர்மானத்தையும் எடுங்கள். எத்தனை முறை விவிலியத்தை வாசித்தோம் அல்லது எவ்வளவு நேரம் விவிலியத்தை வாசித்தோம் என்பதைக் காட்டிலும் விவிலியம் காட்டும் வழியில் நடப்பது மிக முக்கியம் என்பதை மறவாதீர்கள்.

ஓராண்டில் விவிலியம் என்ற மறைமாவட்ட முயற்சியில் பங்கெடுப்போம். மரியன்னையின் திருவயிற்றில் கருவான வார்த்தையான இறைவனின் அருளும், ஆசியும் உங்களோடிருப்பதாக.

God Bless You All

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை





உதயம் 26 தாரகை 1

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### பூமியின் கதறலுக்காக...

பூமியின் கதறலையும், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றம் ஆகியவற்றால் பாதிக்கப் பட்டவர்களின் கதறலையும், நாம் ஒவ்வொருவரும் கேட்டு இதயத்தில் எடுத்துக் கொள்ளவும், நாம் வாழ்கின்ற இந்த உலகத்தின் மீதான தனிப்பட்ட பராமரிப்பை அனைவரும் மேற்கொள்ளவும் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . 4
   அருள்பணி. குமார்ராஜா
2. இறைவனின் திருச்சமூகம் . . . . . . . . . . . . . . . 6
   கலாபன் வாஸ்
3. என் மீட்டலால் உனில் மாற்றங்கள் . . . . . . . . . 8
   ம. வெனான்சியுஸ்
4. பிறப்பின் சிறப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . 10
   ஜோ. ரெஜினா கிரகோரி
5. துயர்கள் நீக்கும் அன்னை மரியாள் வியாகுல மாதா . . . . . . . . . . . . . . . . . . 12
   ரோஸ் சேவியர்
6. பகைவரை அன்பு செய்யுங்கள் . . . . . . . . . . 14
   சுரேஷ்
7. விவிலியப்போட்டி. . . . . . . . . . . . . . . . . . . . . 16
8. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 19
9. மரியாவின் புகழ். . . . . . . . . . . . . . . . . . . . . 23
   அமலா சன்ட்ரோன்சியா



7

மரியன்னையின் திருப்பெயர்கள்



# கன்னிமை குன்றா அன்னை

லொரெட்டோ மன்றாட்டு மாலையில் நம் மரியன்னையைக் கன்னிமை குன்றா அன்னை (Mother Most Chaste) என்று அழைத்துப் பெருமைப்படுத்துகிறோம். "அன்னை மரியா முப்பொழுதும் கன்னி" என்பது நம் திருஅவையின் மரியியல் நம்பிக்கைப் பேருண்மைகளுள் (Marian Dogmas) ஒன்று. இயேசுவைப் பெற்றெடுக்கும் முன்பும், பெற்றெடுத்த வேளையிலும், பெற்றெடுத்த பின்னும் அவர் கன்னிமை குன்றாமலே இருந்தார் என்பதே அதன் விளக்கம்.

இந்தப் பேருண்மையைத் திரு அவைத் தந்தையர் பல விதங்களில் விளக்கிப் போதித்துள்ளனர். மேலும், அதற்கான விவிலிய ஆதாரங்களைத் திருவிவிலிய ஆய்வு மற்றும் தியானத்தின் ஒளியில் கண்டடைந்தனர். அவ்வாறு, மரியாவின் கன்னிமைக்கு அவர்கள் கண்டுணர்ந்த ஒரு முன்னடையாளம் இனிமைமிகு பாடல்கள் நூலில் காணப்படுகிறது. "பூட்டியுள்ள தோட்டம் நீ. என் தங்காய், மணமகளே, பூட்டியுள்ள தோட்டம் நீ. முத்திரையிட்ட கிணறு நீ" (இபா 4:12). இவ்வரிகளில் இயேசுவின் தாய் மரியாவின் கன்னிமை வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் போதித்தனர். "பூட்டியுள்ள தோட்டம்", "முத்திரையிட்ட கிணறு" என்னும் இரண்டு உருவகங்களும், அன்னை மரியா கடவுளுக்கு மட்டுமே சொந்தமானவர், தூய ஆவியாரால் மட்டுமே நிழலிடப்பட்டவர் என்னும் பேருண்மை விளக்கப்பட்டுள்ளது.

புனித அம்புரோஸ், புனித ஜெரோம், புனித அகுஸ்தினார், புனித தாமஸ் அக்குவினாஸ் ஆகியோர் அன்னை மரியாவின் கன்னிமையைப் பற்றி அதிகமாகப் போதித்துள்ளனர், எழுதியுள்ளனர், இவர்கள் எசேக்கியேல் இறைவாக்கு நூலின் 44ஆம் அதிகாரம் அன்னை மரியாவைப் பற்றியே பேசுகிறது என்று எழுதியுள்ளனர். "கிழக்கு வாயிலின் சிறப்பு" என்று தலைப்பிடப்பட்டிருக்கிற இந்த அதிகாரத்தில் "ஆண்டவர் என்னிடம் கூறியது: இந்த வாயில் மூடியே இருக்க வேண்டும். அது திறக்கப்படக்கூடாது. யாரும் இதன் வழியாய் நுழையக்கூடாது. ஏனெனில், இஸ்ரயேலின் தலைவராகிய ஆண்டவர் இதன்வழி நுழைந்தார். இது மூடியே இருக்க வேண்டும்" (எசே 44:2) என்னும் வரிகள் மரியன்னையின் கன்னிமையைச் சுட்டுகின்றன என்று எழுதினார் புனித ஜெரோம்.

"பூட்டப்பட்ட வாயில்" என்னும் பெயர் மரியாவைத் தவிர வேறு யாருக்குப் பொருந்தும் என்று கேள்வி எழுப்பினார் புனித அம்புரோஸ். இறைமகனாம் இயேசுவைப் பெற்றெடுத்த காரணத்தால் அன்னை மரியா என்றுமே கன்னியாகவும், கன்னிமை குன்றாதவராகவும் திகழ்கிறார். பாவக் கறையைப் போக்க வந்தவரான இயேசு, எப்படி தமது பிறப்பால் தமது தாயின் கன்னிமையைக் குன்றச் செய்வார்? என்று இன்னொரு கேள்வியை எழுப்பினார் புனித தாமஸ் அக்குவினாஸ்.

கன்னிமை என்பது கடவுள் மரியாவுக்குத் தந்த கொடை. அந்த அன்னையின் பரிந்துரையால் நாமும் அந்தக் கொடையைப் பெற்றுக்கொள்வோமாக. ★



8

# மாசில்லாத அன்னை



நம் தாய்த் திருஅவை அன்னை மரியாவைப் பல்வேறு பெயர்களால் வாழ்த்துகிறது. அவற்றுள் ஒன்றுதான் மாசில்லாத அன்னை (Mother Inviolate).. மானிடர் அனைவரும் பாவத்தால் மாசடைந்துள்ள சூழலில், அன்னை மரியா மட்டுமே எந்த மாசுமற்றவர் என்பது இதன் பொருள்.

உலகம் மாசடைந்துகொண்டே வருகிறது என்று இன்றைய சமூக ஆர்வலர்கள் கவலையோடு எச்சரிக்கிறார்கள். நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக், வாகனங்கள், தொழிற்சாலைகளிலிருந்து வரும் கரும்புகை, பொறுப்புணர்வின்றி நாம் கொட்டும் கழிவுகள் போன்றவை நம் உலகையும், இயற்கையையும் மாசுபடுத்தி வாழத் தகுதியற்றதாக மாற்றிவிட்டன என்கின்றனர். அவற்றோடு மனிதரின் உள்ளமும், ஆன்மாவும்கூட பாவத்தினால் மாசடைந்துவிட்டன என்றும் நாம் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், மரியா மட்டுமே எக்காலத்திலும் மாசில்லாத அன்னையாக விளங்குகிறார்.

மாசின்மை என்பது ஓர் இறையியல் இயல்பு. கடவுள் மாசற்றவராய் இருக்கிறார். கடவுளின் மகனான இயேசுவும் மாசற்றவர் என்று அழைக்கப்படுகிறார். தமது இரத்தத்தைச் சிந்தி இயேசு நம்மை மீட்டார் என்று கூறும் பேதுரு, அது "**மாசு மறுவற்ற** ஆட்டுக் குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும்" (1 பேது 1:19) என்கிறார். இயேசு மாசற்றவர் என்றால், அவரைத் தம் வயிற்றில் தாங்கி, ஈன்ற அவரது அன்னையாம் மரியாவும் மாசற்றவராகத் தானே இருக்க முடியும்? "இயேசுவைக் கருத்தரித்தபோது மரியா தம் மாசின்மையை இழக்காததுபோலவே, அவரைப் பெற்றெடுத்தபோதும் மாசின்மையை, கன்னிமையை அவர் இழக்கவில்லை" என்கிறார் புனித பெரிய லியோ. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான "திருஅவை" எண் 64ஐ மேற்கோள் காட்டி, "கன்னியும், தாயுமான மரியா, கன்னியும் தாயுமான திருஅவைக்கு அடையாளமாயுள்ளார் என்கிறது கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி (CCC 507).

அது மட்டுமல்ல, நாமும் மாசற்றவர்களாய் வாழமுடியும் என்பதற்கான மாதிரியாகவும், அடையாளமாகவும் அன்னை மரியா விளங்குகிறார். "நாம் உடலிலும் உள்ளத்திலும் **மாசு எதுவுமின்றி** நம்மையே தூய்மைப்படுத்துவோம். கடவுளுக்கு அஞ்சித் தூயவாழ்வில் நிறைவடைவோம்" (2 கொரி 7:1) என்று அழைக்கிறார் பவுலடியார். அவ்வாறே, பேதுருவும் "உங்களை அவர் **மாசு மறுவற்றவர்களாய்**, நல்லுறவு கொண்டவர்களாய்க் காணும் வகையில் முழுமுயற்சி செய்யுங்கள்" (2 பேது 3:14) என்று அறைகூவல் தருகிறார்.

எனவே, மாசின்மை என்பது திருமுழுக்கு பெற்ற அனைவருக்குமான ஓர் அழைப்பு. நாம் எல்லாருமே மாசின்றி வாழவேண்டும். அதற்காகத்தான் கடவுள் நமக்கு இறைவார்த்தை, நற்கருணை, அன்னை மரியாவைக் கொடையாகத் தந்துள்ளார். மாசில்லாத அன்னையின் பரிந்துரையால் நாமும் மாசின்றி வாழ்வோமாக.



அருள்பணி. குமார்ராஜா

# இறைவனின் திருச்சமூகம்

ஒவ்வொரு குடும்பமும் கிறிஸ்துவின் இறையாட்சிப் பணியில் பங்கேற்று, இரண்டு முக்கியமான செயல்களில் ஈடுபடுவதன் மூலம், உலகைக் காப்பாற்ற முடியும்.

❖ தங்களுடைய குடும்பத்திற்குள்ளேயே ஒற்றுமையையும் ஒழுங்குமுறையையும் உறுதிப்படுத்த வேண்டும்.

❖ தாங்கள் வாழும் சமூகத்துடன் ஒட்டு மொத்தமாக ஒருங்கிணைப்பைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

இவையிரண்டும் ஒன்றோடொன்று இணைந்ததாக ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் அடித்தளமாக அமைவது - இறை இயேசுவை நம் தலைவராக ஏற்றுக் கொள்வதாகும். அவரே என் தலைவர் - என் குடும்பத்தின் தலைவர் - என் சமூகத்தின் தலைவர் என்ற உறுதிப்பாடு தேவை

அருங்கொடை உடன்படிக்கைச் சமூகம் துலங்குவதற்குத் தூய ஆவியாரின் அருளை வேண்டிப் பெற வேண்டும். செபச் சமூகமாக மாற்றம் பெறுகிறோம். இறை புகழ்ச்சியும் துதியும் தோத்திரமுமே இங்கு முதலிடம் பெற வேண்டும். ஒருமுறை இயேசுவைத் தங்களின் தலைவராக அவரவர் வாழ்வில் ஏற்றுக் கொள்வோமானால், நம்மை நமக்குள் ஒருங்கிணைத்துப் பலப்படுத்துவார்.



குடும்பங்கள் ஒன்றோடு ஒன்று உறவில் இணையும்போது, புதிய சமூகம் மலர்கிறது..... ஒற்றுமை உருவாகிறது. சகோதரத்துவ சிந்தை கவர்கிறது.... இந்த மறுமலர்ச்சி பரவுகிறது.... இத்தகைய சமூகங்களிலிருந்து அன்பும், சமாதானமும் நீரோடை போல் பெருக்கெடுத்து வளம் சேர்க்கிறது. உலகம் புத்துணர்ச்சி பெறுகிறது. இறைவன் எதிர்பார்க்கும் அன்புச் சமூகம் பரிமளிக்கிறது.

## அருட்பணியாளர்களும், துறவியரும் சமூக உருவாக்கப் பணியில்

பின்வருபவை, அருட்பணியாளர்கள் / துறவியர்க்கு மட்டுமல்ல.... அனைவருக்குமானதுதான்.

திருமண அருளடையாளத்தைப் போன்று, குருத்துவமும் (பணியின் அருளடையாளம்), திருமுழுக்கு அருளடையாளத்தின் தொடர்ச்சியும் நிறைவுமாகும். திருமுழுக்கின் வழியாக இயேசுவின் திருஉடலோடு ஒன்றிணைக்கப்படுகிறோம். மற்ற அருளடையாளங்கள் எல்லாம், திருவுடலின் வளர்ச்சிக்கும், சமூகங்களின் உருவாக்கத்திற்கும் உதவுகின்றன. எனவே, திருமணம், குருத்துவம் ஆகிய அருளடையாளங்கள், கிறித்தவர்களை, குறிப்பிட்ட சில பணிகள் மூலம் இறைவனின் திருஉடலோடு ஒன்றிணைய உதவுபவை. இந்த இரு அருளடையாளங்களும், திருமுழுக்கினால் நாம் கடமைப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற உறுதுணையாய் இருப்பவை.

துறவியரின் பணி வாழ்வும் திருமுழுக்கு அருளடையாளத்திலிருந்து உருவாகிறது. துறவியர் கொடுக்கும் வார்த்தைப்பாடு இறைவனோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல -

துறவுச் சமூகத்தினர், திருமுழுக்கினால் திருச்சபையின் உறுப்பினராயிருக்கும் அனைவரோடும் செய்துகொள்ளும் பணியேற்பாகும்.

துறவற வாழ்க்கையைத் தாய்த் திருச்சபை அங்கீகரித்து ஆசீரளித்திருக்கிறது - கிறிஸ்துவின் இறையாட்சிப் பணியை மக்களிடையே கொண்டு செல்ல, துறவு வாழ்க்கை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும், அவரவர் பெற்றுக் கொண்ட இறையழைப்பை மதித்து, திருமுழுக்கினால் சுமத்தப்பட்ட பணிகளை நிறைவேற்ற வரவேற்கிறது: பிறரன்புப் பணிகளில் ஈடுபட வாய்ப்பு அளிக்கிறது.

துறவற வாழ்விலேயே, இணைந்து செயல்படும் சமூக உறவுமுறை உருவாகி விடுகிறது. எனவே, சமூக உருவாக்கத்தில் அவர்களில் திறம்படச் செயல்பட முடியும். காலத்தின் அழைப்பிற்கேற்ப, துறவியர் தங்கள் இல்லிடத்திற்குள்ளேயே முடங்கி விடாமல், பொதுச் சமூகங்களுடன் இணைந்து, புதிய சமூகங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டியவர்கள்.

வரலாற்றில் வாழ்ந்த துறவியர் சபைகள், மக்களோடு அன்புப் பணிகளில் ஆர்வமுடன் செயல்பட்டதைப் பார்க்கிறோம். .... துறவற இல்லங்கள், உபசரிப்பதிலும், ஆன்மீக வழிகாட்டுவதிலும், ஏழை எளியோருக்கு உதவுவதிலும், கிறிஸ்தவப் பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தியிருப்பதை அறிய வருகிறோம். சில துறவறச் சபையினர், மக்கள் மத்தியில் சென்று இறைவார்த்தையை வாசித்து விளக்கமளித்த செய்தியையும் காண்கிறோம்.

ஆனால், சமீப காலமாகச் சில துறவற சபைகள் தோல்வியைச் சந்திக்க நேர்ந்துள்ள தகவலும் அதிர்ச்சியைத் தருகிறது. காரணம்?

- ஒருங்கிணைந்த சமூகமாகச் செபிக்கும் பழக்கம் அற்றுப் போயிற்று. அப்படியே அவர்கள் இணைந்து செபித்தாலும், வல்லமையுள்ள மன்றாட்டாக அது அமையவில்லை!

- காலத்தின் தேவைக்கேற்ப, இறை மக்களோடு இணைந்து செயல்படுவதைத் தவிர்த்து, துறவற இல்லத்திற்குள்ளேயே முடங்கிவிட்டது!

இன்று நாம் காணும் சமூகங்களில் உறவு இல்லை - பகிர்தல் இல்லை - சிதைந்த குடும்பங்கள் - அறியாமை - பண்பாட்டு குறைபாடு - பெரியோரை மதிக்கும், போற்றும் நிலையில்லை - உயிரின் மீதே பற்றுதல் இல்லாத பரிதாபம் - பெண்மையைச் சீரழிக்கும் போக்கு - வன்முறை..... இப்படி இறைகுலம் அவல நிலையை எதிர்கொண்டிருக்கும்போது, 'நமக்கும் இதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை!' - என்று வீதிக்கு வராமல் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதற்குப் பெயர் துறவறமல்ல.

பெரும்பாலான துறவற சபைகளில் இணைந்துள்ள துறவிகளில் பலருக்குச் சமூகப் பற்றுதலே இல்லை! துறவற வாழ்வில் இணைய விரும்புவோர், கிறித்தவ அன்பிலும், சகோதரத்துவத்திலும், மனித நேயத்திலும் பற்றுதல் உள்ளவர்களாக இருப்பது அடிப்படைத் தேவை.

இன்றையத் தேவை, இறைமக்களோடு இணைந்த வாழ்க்கை - ஒதுங்கி நின்று விடுவது, இறைவனையே ஒதுக்கி விடுவதாகும்.



**கலாபன் வாஸ்**

# உன் மீட்டலால் எனில் மாற்றங்கள்

**நகரமெங்கும் உற்**சாக வெள்ளம் கரைபுரண்டோடியது.

மறுநாள் பனிமய மாதா திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வாக பந்தல் ஆசீர்வாதம் நடைபெறவிருந்தது.

"சாலினி உள்ளே வரலாமா?"

"யாரு சுபாவா? வழக்கமா கதவைத் திறந்துகிட்டு உள்ளே வருபவள்தானே? இப்ப என்ன கேள்வி கேட்டுகிட்டு வாசல்ல நிற்கிறயாக்கும்?"

"அப்புறம் பெண் வீட்டில் இருந்து ஏதாவது தகவல் வந்ததா? ஏற்கனவே சிந்தாயாத்திரை மாதா ஆலயத்தில் வைத்து பெண்ணைப் பார்த்தாயே? அந்தச் சமயம் உன் பையன்கூட அலுவல் சம்பந்தமாகப் புனே சென்றிருந்தானே?"



"மாலையில் அவங்க குடும்ப நண்பர் பேசினார்."

"என்ன சொன்னார்?"

"பையனுக்கு இவ்வளவு நாளாக ஏன் திருமணம் செய்யாமல் இருக்கிறீர்கள்?"

"இப்பதானே பார்க்க ஆரம்பித்துள்ளோம். வருகிற பொண்ணுகள் எல்லாம் குண்டாக இருக்கிறார்கள். உங்களுக்குத்தான் தெரியுமே."

"ஆமாம், என்னிடம் கூட சொல்லி யிருக்கிறீர்கள்."

"நாம் வழக்கமாக 27இல்தானே பார்ப்பது வழக்கம். பெரும்பாலும் 29இல் திருமணம் செய்வார்கள். சொந்தத்தில் என்றால் 25 வயதில் சீக்கிரம் முடிப்பார்கள். இதுதானே நம்ம வழக்கம்."

"ஆனால், 90இல் பிறந்தவருக்கு ஏன் இன்னும் திருமணம் ஆகவில்லை, அதுவும் பெண்ணின் அம்மா, தன் கணவன் சரியான மதுப்பிரியர் என்று

கூறியும் நீங்கள் ஒத்துக்கொள்வதற்கு என்ன காரணம்?"

"90 இல்லையே 97இல் தானே பிறந்துள்ளார்."

"நீங்கள் கொடுத்த தகவலில் அப்படித்தானே (90) இருக்கிறது."

"97 என்றுதானே குறிப்பிட்டிருந்தோம். இருங்கள். நான் அப்படியே அதை வாட்ஸ் அப்பில் பார்த்துச் சொல்லுகிறேன்." (வாட்ஸ்அப்பில் பார்த்து 27.07.1997 என்றுதானே குறிப்பிட்டிருக்கிறது என்றேன்.)

"அடடா, அப்படியானால் நானே அவர்களிடம் சரியான வயதுதானே என்று சொல்லியிருப்பேனே. சரி.சரி. அவர்கள் சாதாரணமாகத்தான் கேட்டார்கள். நீங்கள் இது பற்றிக் கவலைப்பட வேண்டாம்."

"அப்புறம் என்ன காரணம் என்று கேட்டீர்களே? பையனுடைய தாத்தா மது அருந்துவது இல்லை. பையனின் அப்பாவும் அதைத் தொடுவதுகூட இல்லை. நிறுவனத்தில் முதல் நிலை அதிகார வட்டத்தில் இருக்கும் பையன்கூட அவனுக்கு நிறுவன அதிகாரிகளின் உயர்நிலைக் கூட்டங்களில் வழங்கப்படுகின்ற விதவிதமான மதுவகைகளின் பக்கம் செல்வது கிடையாது. நாங்கள் கடவுளின் பிள்ளைகள், வளர்ப்பு அப்படி? அதனால் எவரும் பையனை எதைக் காட்டியும் மதுப் பிரியராக்க முடியாது என்பதில் எங்களுக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கைதான் காரணம்!"

"அதுசரி, பையனை எங்கேவைத்துப் பார்க்க இருக்கிறார்கள்?"

"நாளைக் காலை பதினொரு மணிக்குப் புனித யூதாததேயு ஆலயத்தில் வைத்து பையனைப் பார்க்கவிருக்கிறார்கள்."

"ஏன் அவ்வளவு தூரம்?"

"அங்கேதான் மாதா திருவிழா நவநாட்களில் கூட்டம் இருக்காது. தவிர பந்தல் ஆசீர்வாதம் கூட, மற்றவர்கள் யாரும் பார்க்க வாய்ப்பு இல்லை அல்லவா?"

"ஏன் பார்த்தால் என்னவாம்?"

"முடிந்துவிட்டால் சரி. ஏதாவது காரணத்தால் முடியாமல் போனால் நாலு பேரு நாலு விதமாகப் பேசுவார்களே?"

"ஓ! அதுவும் சரிதான். கவலைப் படாதே! பனிமய மாதா பேராலயத்தில் அண்ணன் பிராங்கோ பியானோ இசைக்க, வாழ்க்கையில் மட்டுமல்ல இசையிலும் துணையாக நீங்கள் இருவரும் இறைப்புகழும், மாதாவின் புகழையும் தொடர்ந்து பாடி வருகிறீர்கள்! கண்டிப்பாகப் பனிமய மாதா உங்களுக்கு நல்ல வழியைக் காட்டுவார்."

பந்தல் ஆசீர்வாதம் முடிந்ததும் எதிர்ப்பட்ட சாலினியிடம் "உன் வாய்க்கு சர்க்கரைதான் போடவேண்டும்" என்றாள் சுபா.

"ஆணி" காட்டினாள் கிண்டலாக, தோழி.

"நீ சொன்ன மாதிரியே அன்னையைப் புகழுவோர்க்கு ஒரு குறையும் வராது என்பது உண்மையாகிவிட்டது. மேலும், எங்கள் வீட்டு ஆண்கள் மதுப்பிரியர் அல்ல என்று அறிந்து பெண்ணின் அப்பா, தான் இனி மது அருந்துவதில்லை என்று தன் மகளிடம் உறுதி கூறியிருக்கிறார்."



ம. வெனான்சியுஸ்

# பிறப்பின் சிறப்பு



"வானமும் பூமியும் தோன்றுமுன்னே, பரிபூரணத் தாயென நீ திகழ்ந்தாய். தூயோர்கள் எல்லாம் நீ தோன்றும் நாளினை ஓயாமல் நோக்கிப் பார்த்தே தம்முள் மகிழ்ந்தாரே" எனப் பாடப்படும் மரியன்னையை இறைவன் உலகம் தோன்றும் முன்னே தெரிந்துகொண்டார்.

ஆம், இறைவன் இவ்வுலகைப் படைத்து, அதை ஆள மனிதனைப் படைத்தார். படைப்புகள் அனைத்தும் அவனது சொந்தமாகின. ஆனால் அலகையின் தீய வழியில் சிக்கிய ஆதி மனிதன் ஆதாம் ஏவாளின் தூண்டுதலால், இறைவனின் கட்டளையை மீறினான். பாவச் சேற்றில் விழுந்தான். ஆதிப் பெற்றோரின் பாவத்தின் விளைவு, தலைமுறை தலைமுறையாக, நாம் சென்மப் பாவத்துடன் பிறக்கும் அவல நிலைக்கு ஆளாக்கியது.

இப்பாவ நிலையிலிருந்து நம்மை மீட்க, ஆதிப் பிதா, அலகையின் தலையை மிதிக்க, ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தார். 'உன் வித்திற்கும், அவள் வித்திற்கும் பகையை உண்டாக்குவோம்' என சவால் விட்டார். தனது ஒரே மகனைக் கருவில் சுமந்து, மரியன்னையைத் தெரிந்தெடுத்து, பாவ நிழலே அணுகாமல் அன்னையைப் பாதுகாத்தார். இறைமகன் குடியிருக்கும் கருவறை தூய்மையாக இருக்கும்படி, அன்னைமரி தன் தாயின் வயிற்றில் உற்பவிக்கும்போதே, சென்மப் பாவமின்றி உற்பவிக்க அருள்கூர்ந்தார். லூர்து மலையில் புனித பெர்னதெத்தம்மாளுக்கு காட்சியளிக்கும்போது மரியன்னையே 'நாமே அமலஉற்பவம்' என வாய்மொழிந்துள்ளார். டிசம்பர் 8ஆம் மேரி அமல உற்பவியின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் அதிலிருந்து பத்தாம் மாதம் செப்டம்பர் 8ஆம் தேதி அன்னையின் உன்னதப் பிறப்பைக் கொண்டாடுகின்றோம்.

அன்னை மரியின் பிறப்பு மண்ணகத்தை விண்ணகமாக்கியது. இறைமகன் இயேசுவை இவ்வுலகிற்குத் தந்தது. நம் பாவங்களுக்கு விடுதலை தந்து மீண்டும் இறைவனோடு நம்மை ஒன்றித்தது. மீட்பின் வரலாற்றைத் திறக்கும் கதவாகத் திகழ்ந்த அன்னைமரி, தன் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் இறைவனுக்குகந்த வாழ்க்கை வாழ்ந்தார். இறைவனுக்கே தாய் என்ற கர்வமின்றி, தாழ்ச்சியுடன் வாழ்ந்தார்.

முதிய வயதில் கருவுற்றிருந்த எலிசபெத்தம்மாளுக்கு உதவி செய்து பிறரன்புப் பணியை பிரதிபலித்தார். கானாவூர் திருமணத்தில், இயேசு தண்ணீரை இரசமாக்கப் பரிந்துரைத்து, நமக்காகப் பரிந்துரைக்கும் தாய் என நிரூபித்தார். இயேசுவை சிலுவையில் அறையும்போது, மீட்பின் திட்டத்தை ஏற்று, 'ஆகட்டும்' என்றே அன்று ஆண்டவரைக் கருவில் கீழ்ப்படிதலுடன் ஏற்ற என்றும் கன்னிகையான அன்னைமரி, இன்று மகனின் சிலுவைச் சாவையும் ஏற்று, தியாகியாக, வீரத் தாயாக நின்றாள். எனவேதான் அன்னையின் பிறப்பு மகிமை பெற்றது.

மரியன்னை எலிசபெத்தம்மாளை சந்திக்கச் செல்லும்போது, எலிசபெத்தம்மாளின் வயிற்றில் இருந்த, புனித திருமுழுக்கு யோவான் தூய்மை அடைந்தார். அந்நேரம் அவர் சென்மப் பாவமும் நீங்கியது. எனவே அவர் பிறப்பும் சிறப்பு பெற்றது.

எனவேதான் திருஅவையில் பொதுவாக புனிதர்களின் விண்ணகப் பிறப்பினை திருவிழாக்களாகக் கொண்டாடி வரும் நாம் மரியன்னையின் பிறப்பு மற்றும் புனித திருமுழுக்கு யோவான் பிறப்பு (ஜூன் 24) இவற்றைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட நமது பிறப்பும் சிறப்பு மிக்கதுதான். சென்மப் பாவத்தோடு பிறக்கும் நாம் திருமுழுக்கு மூலம் இப்பாவம் நீங்கப் பெற்று கிறிஸ்துவின் உரிமைப் பிள்ளைகளாக மாறுகின்றோம். ஆயினும் வளரும்போது மீண்டும் பாவச் சேற்றில் மூழ்கி இறைவனை விட்டு விலகிச் செல்கிறோம். இறைவனோ ஒப்புரவு அருட்சாதனத்தால் நம் உறவை மீண்டும் அவரது இரக்கத்தின் உறவில் பிணைக்கிறார். ஆனால் நாம் அந்த உறவை வலுப்படுத்துகின்றோமா? இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்கின்றோமா?

'இப்படித்தான் வாழவேண்டும்' என்ற கட்டுப்பாட்டை மீறி நமது அற்ப சந்தோஷத்துக்காக எப்படியும் வாழலாம் என்று வாழ்கின்ற நிலைமை இன்று நம்மை ஆள்கின்றதே. தூய ஆவி குடியிருக்கும் நமது உடலையும், இறைவன் மேலான கொடையாகத் தந்த நம் உயிரையும் நாம் மதிக்கின்றோமா?

துன்பத்தைத் தாங்க முடியவில்லை. தோல்வியை ஏற்க முடியவில்லை. ஆசைகளைத் தவிர்க்க முடியவில்லை. வறுமையை எதிர்கொள்ள முடியவில்லை. **நான் ஏன் பிறந்தேன்?** என்று நம்மையே நொந்து கொள்கிறோமே, **நாம் நமக்கு சொந்தமல்ல, இறைவனுக்கு மட்டும்தான் சொந்தம்** என்பதை மறந்து, இறைவனின் பிள்ளைகள் என்பதையும் மறந்து உயிரை மாய்த்துக் கொள்வதில் அவசரப்படும் கோழைகளாக வாழ்கிறோமே.

பிறப்பும், இறப்பும் இறைவன் ஒருவரே நிர்ணயிக்க முடியும். சோதனைகள் வரும்போது, நான் அநாதை அல்ல, இறைவனின் பிள்ளை. அவர் என்னைக் கைவிடமாட்டார். நான் வாழப் பிறந்தவன். என்னால் வாழ முடியும் என்ற தன்னம்பிக்கையோடு வாழ்வோம். இறைநம்பிக்கையைப் பற்றுக்கோளாகக் கொண்டு வாழ்வோம். நம் உறவுப் பாலமாக இருக்கும் அன்னை மரியின் பரிந்துரையில் வாழ்வோம்.

நமது பிறப்பும் சிறப்பாக அமையும்படி, 'வாழ்க்கை ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை' என வாழ்ந்து காட்டுவோம்.



ஜோ. ரெஜினா கிரகோரி

# துயர்கள் நீக்கும் அன்னை மரியாள்

## வியாகுல மாதா

**வியாகுல அன்னை** என்பது கன்னி மரியாவுக்கு அளிக்கப்படும் பெயர்களில் ஒன்றாகும். வியாகுலம் என்பதற்கு துன்பம் என்று பொருள்.

“**மானிட வரலாறு துன்பங்களின் தொடர்கதையே**” என்கிறார் செர்மனி நாட்டு இறையியலார். மானிட சமூகங்கள் அமைதியிலும், வளமையிலும் வாழ்ந்திருந்த காலங்களை விட போர்களாலும், வறுமையாலும், இயற்கைச் சீற்றங்களாலும், ஆதிக்கத்தின் அடக்குமுறையாலும் துன்புற்ற காலங்களே அதிகம்.



கன்னி மரியா, பாமர, சாதாரண மக்கள் சமூகத்தையே சார்ந்தவர். அன்றைய பாலஸ்தீனத்தில் இருந்த உரோமானியர்களின் அரசியல் ஆதிக்கம், பொருளாதார சுரண்டல், கலாச்சார புறக்கணிப்பு, பாதுகாப்பின்மை ஆகியவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டவர். மரியா, தம் துன்ப துயரங்களை மட்டும் நினைத்து, உள்ளம் நைந்து, கவலையில் மூழ்கி விடவில்லை. மாறாக, அன்றைய சமூகத்தில் அவரைப் போல் வருந்திக் கொண்டிருந்த எண்ணற்ற மக்களின் துன்ப துயர்களை உற்று நோக்கவும் அவர்களின் வேதனை, விரக்தி உணர்வுகளை புரிந்து கொள்ளவும், அவற்றை களையும் முயற்சிக்கு தம்மையே அர்ப்பணித்தார். அதுவே உயிருள்ள நம்பிக்கையின் உண்மையான செயல்பாடு.

அன்னை மரியா காபிரியேல் வானதூதரின் வார்த்தைக்கு ‘ஆகட்டும்’ என்று தன்னைக் கையளித்தது முதல் அவர் அனுபவித்த வியாகுலங்கள் பல. அவற்றில் ஏழு வியாகுலங்கள் நம் தாய் திருச்சபை நம்மை தியானிக்க அழைக்கிறது. ஏழு வியாகுலங்கள் அன்னை மரியின் இதயத்தைக் குத்தி வேதனையை தந்தது. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற தன் வேதனையை சாதனையாக மாற்றினார் அன்னை மரியா.

பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த ஏழு வணிகர்களுக்கு அன்னை மரியா தனித்தனியாகக் காட்சி தந்து, செனாரியோ என்ற மலைக்கு வரும்படி அழைத்தார். அங்கே ஒன்று கூடிய எழுவரும் செபிப்பதையும், வியாகுலங்களின் பக்தியைப் பரப்புவதையும், மக்களை பாவம், தீமையில் இருந்து விடுவிப்பதையும் தங்களது முதற்கடமையாக கொண்டிருந்தனர். அவர்களது வாழ்வு மரியன்னைக்கு ஊழியம் புரிவதாக இருந்ததால், அன்னை தன்னை வெளிப்படுத்திய “மரியின் ஊழியர்” என்ற பெயரைத் தமதாக்கிக் கொண்டனர். 12 ஆம் நூற்றாண்டு முதலே மரியாவின் .வியாகுலங்கள் மீதான பக்தி கிறிஸ்தவர்கள் மத்தியில் தோன்றியது. இவ்வாறு துவங்கிய வியாகுல அன்னையின் பக்தி 1244ஆம் ஆண்டு மரியாவின் ஊழியர் சபை தங்கள் முதன்மை பக்தியாக தேர்ந்தெடுத்து கொண்ட 1423இல் கூடிய கொலோன் மன்றம் “மரியாவின் வியாகுலங்கள்“” என்ற திருநாளை உருவாக்கியது.

கி.பி. 1808இல் திருத்தந்தை 7ஆம் பத்திநாதர் நாடு கடத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். ஆறு வருடங்களுக்கு பிறகு 1814இல் விடுதலை செய்யப்பட்ட திருத்தந்தை தமது துயரங்களின் நினைவாக, உரோமை நகருக்கு திரும்ப வந்தடைந்தமைக்கு நன்றியாக வியாகுல அன்னைக்கு செப்டம்பர் மாதம் பெரு விழாவாக திருச்சபை முழுவதும் கொண்டாடும்படி அறிவித்தார்.

**அன்னை மரியாவின் ஏழு வியாகுலங்கள்**

**1. சிமியோனின் இறைவாக்கு :** (லூக் 2:5-35) : அன்னை மரியா தம் குழந்தையை யூத பாரம்பரியப்படி கோவிலில் காணிக்கையாகக் கொண்டு செல்கிறார். அங்கு மெசியா வருகைக்காக காத்திருந்த சிமியோன் என்ற முதியவரின் வாழ்த்து அன்னை மரியாவின் இதயத்தை ஒரு வாள் ஊடுருவிய வேதனையை அளித்தது.

**2. குழந்தையுடன் யூத மக்களின் அடிமை வீடு என்றழைக்கப்பட்ட எகிப்துக்கு தப்பி ஓடுதல் :** (மத் 2: 13,14): தன் மகன் இயேசுவை கொலை செய்யத் திட்டமிட்ட அரசன் ஏரோதுக்கு பயந்து வானதூதரின் வழிகாட்டுதலோடு போக்குவரத்து வசதி இல்லாத இருள் நிறைந்த சூழ்நிலை. பச்சிளம் குழந்தையுடன் மேடு, பள்ளம் நிறைந்த பாலைவனப் பகுதிக்கு மனதில் பயம், வேதனையுடன் செல்லவேண்டிய நிலை.

**3. இயேசு மூன்று நாள்கள் காணாமல் போதல் :** (லூக் 2:43, 44): திருவிழா நாளின் போது மனதில் பதைபதைப்புடன் மகனை அன்னை மரியா தேடுகிறார்.

**4. இயேசு சிலுவை சுமந்து செல்லுதல்** (லூக் 23:27) பிறருக்கு நன்மையே செய்து வந்த தன் மகன் சிலுவைச் சாவை ஏற்கும் நிலையை எண்ணி அன்னை மரியா ஆறாத்துயர் கொள்கிறார்.

**5. இயேசுவின் சிலுவையின் அடியில் அன்னை மரியா :** (யோவா 19:31,42) இயேசுவின் சிலுவைப் பயணத்தில் அன்னை மரியாவும் பங்கெடுக்கிறார். இயேசு தாயை தன் சீடர் யோவானிடம் ஒப்படைக்கிறார்.

**6. அன்னையின் மடியில் மரித்த இயேசு** (யோவா 19:40) ஓவியர் மைக்கேல் ஆஞ்சலோ தத்ரூபமாக நெஞ்சை உருக்கும்படி வடிவமைத்திருக்கிறார். அது உரோம் நகரில் புனித பீட்டர் தேவாலயத்தில் உள்ளது. உடல் வளர்ச்சியிலும் ஞானத்திலும் சிறப்பாக வளர்த்த மகன் தன் மடியில் உயிரற்று கிடப்பதை கண்டபின் இதயம் வாளால் குத்தி கிழித்தது போன்று இருந்திருக்குமல்லவா?

**7. இயேசுவை அடக்கம் செய்தபின் அன்னை அனுபவித்த துயரம்** (யோவா 19:41,42) மகனை பிரிந்த தாயின் மனநிலை சொல்ல முடியாத துயர் அடைந்திருக்கும்.: மீட்பின் திட்டம் நிறைவேற தன்னையே இறைவனிடம் அர்ப்பணிக்கிறார்.

இந்த வியாகுலங்கள் இன்றும் தொடராக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்பது ஞானிகளின் கூற்று.

“வாசல்தோறும் வேதனை இருக்கும் - வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை.” இன்பத்தில் துள்ளாமலும் துன்பத்தில் துவளாமலும் நடு நிலையில் எதையும் தாங்கும் இதயத்தைக் கேட்டு அன்னையின் பரிந்துரையோடு இறைவனிடம் வேண்டும்போது ஆறுதலும், அமைதியும் கிடைக்கும். பிறருக்கு கொடுக்கும்போது மிகுதியாகப் பெறுகிறோம்!



ரோஸ் சேவியர்

# பகைவரை அன்பு செய்யுங்கள்

இயேசுவின் அன்புப் பிள்ளைகளே, மனந்திரும்பி வருகிற எந்தப் பாவியும் இயேசுவுக்கு தூரமானவனல்ல. நீங்கள் பாவத்திலே சிக்கித் தவிக்காமல் இயேசுவின் அருகிலே கடந்து வாருங்கள்.

ஒருமுறை விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சகோதரன் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு தெருவிலே நடந்து போய்க் கொண்டிருந்தபோது, ஒரு வயதான அம்மா, "தம்பி, துப்பாக்கியை சுமந்து செல்லும் நீ, திருவிவிலியத்தை உன்னுடைய கைகளில் சுமக்க வேண்டும், கட்சியைப் பற்றிப் பேசுகிற நீ ஆண்டவருடைய அன்பைப் பற்றி பேசவேண்டும். அவர் உனக்கு தூரமானவர் அல்ல. உன்னை அன்பு செய்கிறார்" என்று சொன்னார்கள்.

அவன், "அம்மா, நான் நாட்டிற்காக, தமிழின மக்கள் அழிக்கப்படக் கூடாது என்ற ஒரு உயரிய காரணத்தோடு போர் செய்யப் போகிறேன். என்னை திசை திருப்பும்படி இப்படி எல்லாம் என்னிடம் சொல்லாதிருங்கள்" என்று சொன்னான்.

ஒவ்வொரு முறை அவன் தெருவில் போகும்போதும் அந்த அம்மா இவ்வாறு சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

ஒருநாள் அவனுக்கு கோபம் வந்தது. "ஏய் கிழவி. இன்னொரு முறை நீ இயேசு இயேசு என்று சொன்னால் துப்பாக்கியாலே அடித்து உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று சொன்னான்.

அதற்கு அந்த அம்மா, "இனி நான் உன்னிடம் இயேசுவைப் பற்றி சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்றை நீ ஞாபகத்தில் வைத்துக் கொள். இயேசு உனக்கு



தூரமானவரல்ல. உனக்கு ஏதாவது ஆபத்து வரும்போது, பிரச்சனை வரும்போது, இயேசு என்று கூப்பிடு. அவர் நிச்சயமாய் உனக்கு பதிலளிப்பார்" என்று சொன்னார்கள்.

ஒருநாள் திடீரென்று அவன் இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, விசாரிப்பதற்காகக் கொண்டு செல்லப்பட்டான். வழக்கமாய் அந்த சித்திரவதை மிகவும் கொடூரமாக இருக்கும். ராணுவ இரகசியங்களையெல்லாம் சொல்லும்படி





குண்டுசியை பழுக்க சூடாக்கி உடம்பெல்லாம் குத்துவார்கள். அதிலே போய் யாரும் உயிரோடு திரும்பவே முடியாது. மாதக் கணக்கான சித்திரவதைக்குப் பிறகு கொன்று தூக்கி எறிந்துவிடுவார்கள்.

இந்த சகோதரனையும் அவ்வாறே சித்திரவதை செய்கிற இடத்துக்குக் கொண்டு போனார்கள். அப்போது அவனுக்கு திடீரென்று அந்த வயதான அம்மா ஆபத்துக் காலத்தில் இயேசுவைக் கூப்பிடுவதைக் குறித்து சொன்னது நினைவுக்கு வந்தது.

அவன் மரிப்பதற்கு பயப்படவில்லை. ஆனால் சித்திரவதைக்கு பயந்ததினாலே “இயேசுவே” என்று கூப்பிட்டான். “நீர் எனக்கு அருகில் இருக்கிறீரென்றால், எனக்கு உதவி செய்யும்” என்று செபித்தான். அப்போது அவன் எதிரில் ஒருவர் நின்று மிகுந்த பாசத்தோடு அவனை நோக்கிப் பார்த்து, “தம்பி, நீ ஏன் இங்கே வந்தாய்? நீ இங்கே வரக்கூடாது. இந்தக் கதவு திறந்திருக்கிறது. இது வழியாய் நீ ஓடிப் போய்விடு” என்று சொல்லி, கதவைத் திறந்து அவன் தப்பித்துக்கொள்ள உதவினார்.

அவனுக்கு அவர் யார் என்றும், எப்படி வந்தார் என்றும் தெரியாது. இயேசு அருகிலிருப்பதையும், அவர்தான் வந்தார் என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான். அவன் தன்னுடைய இயக்கத்திற்காக எவ்வளவோ பேரைக் கொன்று குவித்தவனாக இருந்தபோதிலும், இயேசு அவன்மேலும் அன்பு செலுத்தி அவனை விடுவிக்கிறவராய் இருந்தார்.

அன்பானவர்களே.... இயேசு உங்களுக்கும் மனம் இரங்காமலிருப்பாரோ? உங்களுடைய செபத்தைக் கேட்காமல் இருப்பாரோ? உங்களுடைய கண்ணீரைத் துடைத்து, உங்களை ஆறுதல்படுத்தாமல் இருப்பாரோ? இன்றைக்கும் அவர் தூரமானவர் அல்ல. அவர் மனதுருக்கத்தோடு உங்களைப் பார்க்கிறார். உங்களுக்கு என்ன தேவை என்பதை இயேசு அறிந்திருக்கின்றார். அவர் நீங்கள் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் மிக அதிகமாய் உங்களை ஆசீர்வதிக்க வல்லமை உள்ளவர்.



சுரேஷ்

# விவிலியப் போட்டி 113

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## மத்தேயு நற்செய்தி : அதிகாரம் 1–10 வரை

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வார்த்தைகளில் விடையளி :**

1. நான் வெளியே சென்றால்தான் அவன் பேசுவான், – நான் யார்? பேசுபவர் யார்?
2. நான் கட்டு இல்லாதவன். என்னைப்போல இருக்கும்படி இயேசு கூறினார். – நான் யார்?
3. தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். – இக்கூற்று சரியா? தவறா?
4. இயேசு கிறிஸ்துவின் தலைமுறை பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பெண்கள் எத்தனை பேர்?
5. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவருக்கே பணி செய்யாதே. – இக்கூற்று சரியா? தவறா?
6. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்?
7. ‘அறிவிலியே’ என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். – இக்கூற்று சரியா? தவறா?
8. எங்கே செல்வத்தை சேர்த்து வைக்க வேண்டும்?
9. இடுக்கமான வாயிலின் வழியே நுழைய வேண்டாம். – இக்கூற்று சரியா? தவறா?
10. நூற்றுவர் தலைவர் எந்த ஊர்?

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.09.2024**

# விவிலியப் போட்டி 112 ஆகஸ்டு 2024 விடைக்குறிப்புகள்

## எஸ்தர் அதிகாரம் 1–10 வரை

| | | |
|---|---|---|
| 1. | எஸ்தர் | எஸ்தர் 2:7 |
| 2. | சோசரா | எஸ்தர் 6:13 |
| 3. | மொர்தெக்காய் | எஸ்தர் 8:2 |
| 4. | மொர்தெக்காய், ஆமான் | எஸ்தர் 10:3 |
| 5. | திருவுளச்சீட்டு | எஸ்தர் 9:26 |
| 6. | 10 | முன்னுரை |
| 7. | காயு | எஸ்தர் 2:8 |
| 8. | மொர்தெக்காய் | எஸ்தர் 4:1 |



# செப்டம்பர் 2024

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 157**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 98**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. சிந்தாயாத்திரை அன்பியம் **ஜெஃப்ரினா ராயன்**
2. சிறுமலர்அன்பியம் **செலஸ்டின்**
3. சூசையப்பர் அன்பியம் **மோனிஷா**
4. வியாகுலமாதாஅன்பியம் **லூர்து லினட்**

**பாராட்டுக்குரியவர்கள் : 94**

**அந்தோனியார் அன்பியம்**
5. லூக்காஸ் சகாயம்
6. சரோஜா
7. பிருந்தா

**அன்னை தெரசா**
8. சுரேஷ் பிரேமா
9. ரொவீனா ஜோ
10. செல்வராணி
11. ரெயிசா சுஜய்
12. சுகன் மோனிஷா

**அன்னை வேளாங்கன்னி**
13. டென்சி
14. கவாசினி ஆல்வின்
15. நான்சி

**கிறிஸ்தரசர்**
16. லூரட் வசந்த்
17. செலஸ்கி கிளமென்ட்
18. ரெக்ஸ் கிரீன்வெல்
19. எஃப்ரின் ஜூலியோ
20. ஜெகன் பெமினா

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
எவருமில்லை

**திவ்யபாலன் அன்பியம்**
21. பிரின்சி
22. சகாயராணி தன்ராஜ்
23. ஸ்டார்லக் ஏஞ்சலின்

**பாத்திமா மாதா**
24. ஜெசிந்தா கான்ஸ்டன்
25. ராஜா ரீனா
26. ஆல்வின் அனு
27. ஜெனிற்றா மைக்கேல்
28. ஸ்டெபி ரீகன்

**இரக்கத்தின் மாதா**
29. பாப்டிஸ்டா
30. பிரைட்டன் ஜெரோஃபின்
31. இருதயம்மாள் கொன்சால்
32. சித்ரா மோத்தா
33. செல்வி புரோ
34. சேவியரம்மாள் கோமஸ்
35. மேரி ஜியானா ஜோ

**ஜெபமாலை மாதா**
36. சகாயம்மாள் பெனடிக்ட்
37. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
38. அந்தோனிசாமி
39. ட்ரைபேனா
40. டெரன்சியா அரிஸ்டோ
41. அலெக்சான்ட்ரியா இன்ஃபா

**காவல் தூதர்**
42. வெனிட்டாள்
43. எலிஜா இம்மானுவேல்
44. சார்லட் பிராங்க்
45. ஜெசிமா கிளாரன்ஸ்
46. சாந்தி ஆல்ட்ரின்
47. ஜோ ட்ரினிஷா
48. ரஸ்கின் வசந்தா

**குழந்தை தெரசா**
49. கிறிஸ்டி லிஸ்டன்
50. பெனி மொறாயிஸ்

**குழந்தை இயேசு**
51. மோனிகா செபாஸ்டின்
52. எமல்டா
53. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
54. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
55. ரோஸ்லின் தாமஸ்
56. சாண்டினா
57. ஆலிவர் வி. ராயன்
58. ஃபிலோ கோமஸ்
59. ரஜூலா ஜான்போஸ்கோ
60. ஜெனோ சேவியர்

**மிக்கேல் அதிதூதர்**
61. ஜோசபின் பர்னாந்து
62. வினோ அந்தோணி

**பனிமய அன்பியம்**
63. மெர்சி

**பவுலடியார்**
64. ராஜா ரோஸ்லின்
65. லீமாரோஸ் ஜாய்
66. ஹெலினா

**பரிபூரண மாதா**
67. ஜெனிஷா
68. மெடோனா
69. சப்னா கினிஸ்டன்

**பொம்பெயி மாதா**
70. மேத்யூ கர்டோசா
71. தெரசா பிரகாஷ்
72. டிஃபானி அண்டோ
73. ஜான்சிராணி அமல்ராஜ்
74. ஸ்நோ ஆல்ஃப்ரிக்
75. லூடா கான்ஸ்டன்
76. இம்மாக்குலேட் சதீஷ்

**இராயப்பர்**
77. நேவிசம்மாள்
78. டெய்ஸி

**சவேரியார்**
79. டெலிலா அமலன்
80. அண்டன் சகாயம்
81. அனுஷ்யா பீட்டர்
82. ஜான்சி ஜெயகுமார்
83. ரூபா மனுவேல்

**செபஸ்தியார்**
84. அந்தோனியம்மாள் டென்சிங்
85. ஜெசிலா சேவியர்
86. அஸ்கேனியஸ்

**சிந்தாத்திரை மாதா**
87. நேசம்
88. ஜூடி ஆரோக்கியராஜ்
89. செல்வி லாசர்
90. ராஜி ஜஸ்டின்

**சிறுமலர் அன்பியம்**
91. விஜி சகாயராஜ்
92. எல்சிட்டா ஆனந்த்

**சூசையப்பர்**
93. கிறிஸ் ரிஜோ
94. ரூபி கொர்னேலியுஸ்
95. ஹேமலதா
96. பிரின்ஸி சுரேஷ்

**திருச்சிலுவை**
97. ஜஸ்டின் ஸ்நோகுளோரி

**வியாகுல மாதா**
98. பெனிட்டா

## பிற பங்குகளிலிருந்து விடை எழுதியவர்கள் : 59

### பரிசு பெறுபவர்கள் : 4

99. ஆறுமுகநேரி — **தொம்மை அந்தோணி**
100. திண்டுக்கல் — **ரோசாலி**
101. தூத்துக்குடி திரு இதயங்களின் பேராலயம் — **ரமோலா கமிலஸ்**
102. தூத்துக்குடி அந்தோணியார் கோவில் — **இருதயம்மாள்**

### பாராட்டுக்குரியவர்கள் : 55

**ஆலந்தலை**
103. மரியம்மாள்
104. பொன்சேகா தனராஜ்

**ஆறுமுகனேரி**
105. ஜெயராணி

**ஏரல்**
106. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
107. ஹெலன் அன்னமணி

**சென்னை**
108. ரெஜினா கிரகோரி
109. ஒஃபிலியா தாமஸ்
110. டெனிசா கிளாட்
111. பிரேமா குணசீலன்
112. கமலஜோதி ஜெயசீலன்

**சங்கரன்கோவில்**
113. செல்வமேரி

**பெரியகுளம்**
114. குழந்தைதெரஸ்

**திண்டுக்கல்**
115. ஜெர்மேன்

**கோயம்புத்தூர்**
116. சத்யா சேவியர்

**திருச்சி**
117. மோனிட்டா கிறிஸ்டி
118. மேத்யூ விவேக்

**மதுரை**
119. சகோ. ஜான்சிமேரி

**வடக்குத்து**
120. ஹென்றிதாஸ்

**கொடைக்கானல்**
121. ஜெஸிந்தாமார்டின்

**உடன்குடி**
122. ஸ்நோவின்

**கோவளம்**
123. செரோபின் ஜோசப்

**பல்லடம்**
124. பிரான்சிஸ் ஆர்லன்

**கயத்தாறு**
125. அமல்ராஜ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
126. ரிமோல்டா
127. பீட்டர் ஜெயந்தி

**குருஸ்புரம்**
128. ஆசீர்வாதம்
129. பௌவுசி ஜோ மைக்கேல்
130. பிளசி செல்வராஜ்

**லயன்ஸ் டவுண் சகாயமாதா**
131. சுகிர்தா
132. ஷெரினா
133. சகாயம்
134. டோமினிக்

**யூதா ததேயு கோவில்**
135. ரோஸ் சேவியர்
136. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
137. ரியாலினோ
138. பின்டன் சோஃபியா
139. சாந்தினி
140. பேபிவால்டர்

**சார்லஸ் கோவில்**
141. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
142. செக்கரியா சாமுவேல்
143. லிஜியா பர்னான்டோ

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
144. வெர்ஜின்
145. தயாபரராணி

**அந்தோனியார் கோவில்**
146. வயோலா ஜான்சன்
147. சுஜாதா மகேஷ்
148. மென்சிலா லொயோலா
149. ரீடன்

**திரேஸ்புரம்**
150. கோல்வின் ஜேசுராஜ்

**பாத்திமா நகர்**
151. மேரி ஹேம்லின்

**மிக்கேல் அதிதூதர்**
152. வென்சிராணி

**இஞ்ஞாசியார் புரம்**
153. சூசைநவின்
154. அலெக்ஸ் ஜோ ஆனந்த்

**T. சவேரியார்புரம்**
155. ஜெனிதா

**லூர்தம்மாள்புரம்**
156. சகாயராணி

**கால்டுவெல் காலனி**
157.ஸ்நோபின்

## உங்கள் கவனத்துக்கு



பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள்.
ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும்.
மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள்.
வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.

கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 187

இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 157

63796 41209 அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 3)

## செப்டம்பர் - 2024

| | |
|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : **அருள்பணி. பாலன்** |
| களப் பணியாளர் | : **சகோதரர் தினகரன்** |
| பங்கு அலுவலகம் | : 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** திங்கள் முதல் வெள்ளிவரை மாலை 06.15–06.45

சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)

✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).

✓ புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.

✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30

✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
மாலை 04.00 மணி - 05.30 மணி

✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.

✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

01. பனிமயத் தாயின் 442ஆம் ஆண்டுப் பெருவிழாக் கொடியேற்றம் 26.07.2024 அன்று காலையில் **மேதகு ஆயர் ஸ்டீபன்** அவர்களால் நடைபெற்றது. தமிழக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறைக் கண்காணிப்பாளர், மாநகர மேயர் ஆகியோர் கொடியேற்றத்தைக் கண்டு களித்தனர்.

02. **நற்கருணைப் பவனி** 28.07.2024 ஞாயிறு அன்று மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. தொடர்ந்து, ரோச் வளாகத்தில் நடைபெற்ற நற்கருணை ஆசீரில் முப்பதாயிரத்திற்கும் மேல் மக்கள் கலந்து கொண்டனர்.

03. பனிமயத் தாயின் பெருவிழா **மாலை ஆராதனை** 04.08.2024 ஞாயிறு அன்று இரவிலும், பெருவிழாத் **திருப்பலிகள்** 05.08.2024 திங்கள் அன்றும் நடைபெற்றன. மேதகு ஆயர்கள் ஸ்டீபன், இவோன் அம்புரோஸ், அந்தோனிசாமி (பாளையங்கோட்டை மறைமாவட்டம்) மூவரும் மூன்று திருப்பலிகளுக்குத் தலைமையேற்றனர். இரவில் சப்பரப் பவனி நடைபெற்றது. இவை அனைத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

04. பேராலயப் பங்கின் இளையோருக்கான திருப்பலி 28.07.2024 ஞாயிறு அன்று கொண்டாடப்பட்டது.

05. இந்திய நாட்டின் 78 ஆவது விடுதலைப் தினவிழா 15.08.2024 அன்று பங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இரண்டாம் திருப்பலியின் நிறைவில் தேசியக் கொடி கொடிமரக் கம்பத்தில் ஏற்றப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 6. | ஏஞ்சலா இளவேனில் | பினோரின்- ஜீவிதா | 11.08.2024 | பாத்திமாமாதா |
| 7. | டானிக்கா | டிஜூ -இன்பென்டா | 11.08.2024 | திருச்சிலுவை |
| 8. | ஸ்னோ ஷெலென் | மார்ஷல் -அஞ்சுகம் | 18.08.2024 | வியாகுலமாதா |



## வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 9. | ஆண்டனி ஜெஸ்வினா | ஆலன் - ரெமினா | 28.07.2024 | தஸ்நேவிஸ் மாதா |
| 10. | மரிய ஹேட்ரியேல் | அந்தோணிபிச்சை-ஜெனிட்டா | 28.07.2024 | தஸ்நேவிஸ் மாதா |
| 11. | ஆக்னஸ் ஜெசி | தயாளன்- ஜொஷிலா | 28.07.2024 | திவ்யபாலன் |
| 12. | கரோலின் சின்டிவாஸ் | சேவியர் - ஹெலினா | 28.07.2024 | காவல்தூதர் |
| 13. | சிலுவை ஜேஃப்ரோ | ஜேசு ராஜன் - பிரியங்கா | 28.07.2024 | பவுலடியார் |
| 14. | ஆண்டனி வில்சன் | வில்லியம் - பினோலா | 28.07.2024 | பொம்பெய் மாதா |
| 15. | இன்ஃபண்ட் ஜூடோ | வில்லியம் - பினோலா | 28.07.2024 | பொம்பெய் மாதா |
| 16. | ஜெஃப்ரின் | செல்வன் - புஷ்பா | 28.07.2024 | அன்னை வேளாங்கன்னி |



## செபிக்கின்றோம்

## 3. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 7. | ஜெயசீலன் | ஜேசு அடிமை | 31.07.2024 | வியாகுல மாதா |
| 8. | அந்தோணிசாமி | பெர்க்கிரின் | 07.08.2024 | தஸ்நேவிஸ் மாதா |
| 9. | ஜே.எல்.பி. பொனோ வென்சர் ரோச் | ஹில்வியா ரோச் | 17.08.2024 | இரக்கத்தின் மாதா |
| 10. | ஜானகி | செல்வம் கோமஸ் | 24.08.2024 | செபஸ்தியார் |

## நடைபெறவிருப்பவை

★ 06.09.2024 வெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

07.09.2024 மாதத்தின் **முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் அன்பு உணவு வழங்கவிரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.
- ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 10. | 03.09.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | நாமே உன் கடவுளாகிய ஆண்டவர் |
| 11. | 10.09.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே |
| 12. | 17.09.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஓய்வுநாளைப் புனிதமாகக் கடைப்பிடிப்பாயாக |
| 13. | 24.09.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | உன் தந்தையையும் தாயையும் மதித்து நட |



# பனிமய சாட்சியம்

*பனிமய சாட்சியம் : 106*

**அந்தோணிராஜ், நக்கலமுத்தன் பட்டி**

நான் 24 வருடங்களுக்கு முன்பு, எனக்கு குழந்தை பாக்கியம் தரவேண்டி மாதாவிடம் மன்றாடிவிட்டு சென்றேன். எனக்கு அருள் ஜீவா மற்றும் அருள் டேவிட் என்ற இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். கடந்த ஆண்டு என் மகனுக்கு வேலை கிடைக்கவேண்டி மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். நல்ல கப்பல் கம்பெனியில் வேலை கிடைத்தது. ஆதலால் இந்த வருடம் நான் என் குடும்பத்துடன் நன்றி செலுத்த வந்தேன். பனிமய அன்னைக்கு கோடி நன்றியையும் செலுத்துகிறேன். இயேசுவுக்கே நன்றி! பனிமய அன்னையே வாழ்க!

# மரியாவின் புகழ்



பசித்தபோது.....

எனக்கு அன்னம் அளித்தவளே

அழுதபோது.......

உன் மடியினை அன்னையாக கொடுத்தவளே

இந்த பாறை மனதில்......

பக்தியினை புகுத்தவளே

உம் பக்தராய் என்னை மாற்றியவளே

உம்மை வணங்க.......

என் கைகள் எழுகிறது!

உம்மைப் போற்றி பாட......

என் குரலே வீணையாகிறது!

உம்மைப் பார்த்ததும்........

என் கண்களில் நீர் வெம்பி நிற்கிறது!

என்றும் என்றென்றும் நீயே என் உலகம் என்று

இந்த மனம் சொல்கிறது....



மரியே வாழ்க!!

அமலா சன்ட்ரோன்சியா

# 4th Year of Remembrance

*Whoever believes in him shall not perish but have eternal life. (John 3:16)*

# N. THOMAS JUDIX FERNANDEZ



*Softly out of the Shadows*
*There came a gentle call,*
*You took the hand God*
*Offered you and quietly left us all*
*And although we cannot hold you*
*We will never let you go,*
*Because in our hearts you*
*Will live forever,*
*Because we loved you so*

**Born On Earth**
**29.12.1952**

**Born in Heaven**
**08.09.2020**

## Deeply Mourned By

| | | |
|---|---|---|
| *Wife* | : | **LUCIA SORIS** |
| *Son* | : | **J. GORGHY FERNANDEZ** |
| *Daughter in Law* | : | **N. MOFISHA FONSEKA** |
| *Grand Daughter* | : | **G. MARIAA MICHELLE** |

***along with Family Members & Friends***

**F2-AURELIA, No:30 Santhanalakhmi Street, Rajeswari Nagar, Selaiyur 600073- PH:9940470826**

# நூறாம் ஆண்டு பிறந்த நாள் நினைவு



பிறப்பு
28.09.1924

இறப்பு
12.11.2002

# L. மைக்கேல் பர்னான்டோ

அன்பிலே எங்களை அரவணைத்தீர்கள்
ஆற்றலுடன் வழி நடத்தினீர்கள்
உழைப்பிலே உயர்ந்து நின்றீர்கள் - இன்று
எம்மைப் பிரிந்து மீட்பருடன் இணைந்து விட்டீர்கள்
என்றும் எம் நெஞ்சங்களில் வாழ்கின்றீர்கள்.

மறைந்த போதிலும்
நினைத்துக் கொண்டிருக்கும்...

**குடும்பத்தினர்**

*10, கிரகோப் தெரு, தூத்துக்குடி - 1.*

## 25ஆம் ஆண்டு நினைவு நாள்

பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்.
உன்னை பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்



# பியோ ராயன் பர்னாந்து

பிறப்பு 10.12.1978 | இறப்பு 11.09.1999

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!

நீ எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன்...
கண்களில் இருப்பாய் கண்ணீராக....
அன்பு மகனே!

**பிரிவால் துயருறும்**
அம்மா : ராஜேஸ்வரி
மற்றும் குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்.
தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும் தடியும் என்னைத் தேற்றும்

# S. அலங்காரம் பர்னாந்து

பிறப்பு 05.08.1937 | இறப்பு 16.01.2023



**பிரிவால் துயருறும்**
மனைவி : ராஜேஸ்வரி
மற்றும் குடும்பத்தினர்

"Jesus replied, I assure you that
today you will be with me in paradise"

*Luke 23:43*

## 3rd Death Anniversary



# P.R. REZANTH RODRIGO

**Born**
**05.04.1984**

**Heaven**
**23.09.2021**

*In Loving memory*

*Wife* : **ELGIN**
*Daughters* : **SHAIRLY RODRIGO**
**HAZEL RODRIGO**

## 2nd Death Anniversary



# C. PUSHPA RAJAN RODRIGO

**Born**
**03.10.1957**

**Heaven**
**29.09.2022**

*In Loving memory*

*Wife* : **CRAMLIN RODRIGO**
*Son* : **SAHAYA REYON RODRIGO**
*Daughter* : **RUBINI RODRIGO**

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி!

"நீதியுள்ள ஆண்டவர்தம் திருமுகத்தை நேர்மையாளர்கள் காண்பர்"

(திபா 11:7)



மண்ணில்
08.07.1919
விண்ணில்
22.09.2005

மண்ணில்
15.11.1926
விண்ணில்
30.04.2018

## இ. பி. ராயர் இசபெல் கர்டோசா

கண் முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் நிழலாடும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கி சென்றாலும் - மனக்
கண் விட்டு மறையாமல்
காலமெல்லாம் இருப்பீர்கள்!

இறைவா, என்றும் எம் அன்பு பெற்றோர்
உம் திருநிழலில் பேரின்பம் காண இறைஞ்சுகின்றோம்.

நீங்கா நினைவில்

மக்கள், மருமக்கள், பேத்திகள், பேரன்கள்,
பூட்டிகள், பூட்டன்கள்

SHINY Ph : 98421 31493